பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

சுடர்: 5 பிரமோதூத ஹூ ஆவணி மீ 03 உ ஞாயிற்றுக்கிழமை (19-08-1990) ஹிஜ்ரி 1410 முஹர்ரம் பிறை 27 கதிர்: 170

# வீரமுனைப் பகுதியில் 91 தமிழர் சுட்டுக்கொலை!

## 125 பேர் வரை காயமுற்றனர்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 19

**அம்பாறை மாவட்டம் வீரமுனையில் நேற்று முன்தினம் அப்பாவித் தமிழர்கள் 91 பேர் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர். சுமார் 125 பேர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமுற்றனர்.**

இப் பகுதியில் உள்ள ஊர் காவல் படையினருக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டு சில மணி நேரத்துக்குள் இச்சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

விடுதலைப்புலிகள் வட்டாரங்களிலிருந்து இத் தகவல் தெரியவந்தது.

காயமுற்ற தமிழர்களை இராணுவத்தினர் அம்பாறைக்கு கொண்டுசென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது, (உ-5)

## ஈழ அகதிகள் பற்றி பேச்சு

சென்னை, ஆக. 19

இலங்கைத் தமிழ் அகதிகள் பெருமளவில் தமிழகம்வருவது குறித்து ஜனாதிபதி வெங்கட்ராமனைச் சந்தித்து தான் எடுத்துக் கூறியதாக முதலமைச்சர் கருணாநிதி நேற்று செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர் அடைந்து வரும் இன்னல்கள் பற்றியும் ஜனாதிபதியிடம் தாம் விவரித்ததாக அவர் சொன்னார். (உ-எ)

## கிறிஸ்தவ மதகுரு கைது

யாழ்ப்பாணம், ஆக. 19

வாழைச்சேனை அகதி முகாமை பார்வையிடுவதற்காகச் சென்ற கிறிஸ்தவ மதகுரு ஒருவர் சித்தாண்டியில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவம் நேற்றுமுன் தினம் இடம்பெற்றது. (உ-5)

## யாழ். மாவட்ட அகதிகள் எண்ணிக்கை குறைகிறது

யாழ்ப்பாணம், ஆக. 19

யாழ். மாவட்டத்தில் அகதிகள் எண்ணிக்கை குறைந்துள்ளதாக யாழ். செயலக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் எடுக்கப்பட்ட புள்ளிவிவரங்களின் படி 67 ஆயிரத்து 239 குடும்பங்கள் அகதிகளாகப் பதியப் பட்டிருந்தன.

இந்தவாரம் எடுக்கப்பட்ட புள்ளி விவரங்களின் படி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இரவுவேளை பொம்மரிலிருந்து நல்லூர் பகுதியில் கலிபர் தாக்கு!

யாழ்ப்பாணம், ஆக. 19

நேற்று இரவு நல்லூர் பகுதியில் பொம்மரிலிருந்து கலிபர் தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால் இப்பகுதி மக்கள் அல்லோல கல்லோலப் பட்டனர்.

இரவு 7.15 மணியளவில் திடீரென நல்லூர்ப் பகுதி மேல் தோன்றிய பொம்மர்களில் இருந்து கலிபர் வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

முதலில் ஒளிப்பிழம்பாக வேட்டுக்கள் பொம்மர்களில் இருந்து சீறிப்பாய்ந்தன. தொடர்ந்து வேட்டுச் சத்தம் பெரும் அதிர்வுடன்கேட்டது.

சத்தம் ஏதுமின்றி திடீரென வந்த பொம்மர்களிலிருந்து கண்மூடித்தனமாக தொடர்ந்து வேட்டுகள் தீர்க்கப்பட்டதைக் கண்டு நல்லூரைச் சூழவுள்ள பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பெரும் திகிலடைந்தனர்.

வீதியால் சென்றுகொண்டிருந்த வாகனம் எதனையும் கலைத்துக்கொண்டு சென்று பொம்மர்கள் வேட்டுக்களைத் தீர்த்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்டது. இந்தத் தாக்குதலினால் ஏற்பட்ட சேத விவரங்கள் பற்றி தகவல் ஏதும் கிடைக்கவில்லை. (உ-5)

# ஈழத் தமிழ் அகதிகளுக்கு உதவ இந்தியக் கடற்படை

சென்னை, ஆக. 19

தமிழகம் செல்லும் ஈழத் தமிழ் அகதிகளை, இலங்கைக் கடற்படையினரின் துன்புறுத்தல்களில் இருந்து காப்பாற்றும் பணியில் இந்தியக் கடற்படை ஈடுபட உள்ளது.

இதன் பொருட்டு இராமேஸ்வரத்தில் இந்தியக் கடற்படைப் பிரிவு ஒன்று நிறுத்தப்பட்டு உள்ளது.

இந்தக் கடற்படைப் பிரிவில் 60 கடற்படை வீரர்கள் பணிபுரிவர். அவர்கள் பயன்படுத்தவென்று இருபது இயந்திர மீன்பிடி வள்ளங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கைக் கடற்படையினரின் துன்புறுத்தலில் இருந்து இந்திய மீனவரைப் பாதுகாப்பதிலும் இக்கடற்படைப் பிரிவு ஈடுபடும்.

1987 முதல் இந்தியக் கடற்படைப் பிரிவு ஒன்று இராமேஸ்வரத்தில் செயற்பட்டு வந்தது. 1989 ஆரம்பத்தில் இந்தப் பிரிவு [illegible] (உ-எ)

## படையினரால் நால்வர் கைது

யாழ்ப்பாணம், ஆக. 19

மட்டக்களப்பில் சொறிக்கல்என்னும்இடத்தை சேர்ந்த இரு இளம் பெண்களையும், இரண்டு இளைஞர்களையும் இராணுவத்தினர் கடந்த வியாழனன்று கைது செய்து சவளக்கடை முகாமிற்கு கொண்டு சென்றிருப்பதாக அறியவருகிறது. [உ-5]

## நல்லூர் தேர்த் திருவிழா காலை 6 மணிக்கு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஆக. 19

சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தசுவாமிகோவில் தேர்த்திருவிழா இன்று காலை ஆறு மணிக்கு நடைபெற இருக்கிறது. முருகப்பெருமான் வழமைபோல் வெளி வீதி வலமும் வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார்.

கடந்த மாதம் 27 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான நல்லைக் கந்தன் உற்சவம் கடந்த 22 நாட்களாக அமைதியான முறையில், பக்திமயமான சூழ்நிலையில் நடைபெற்று வந்தது.

மகோற்சவத்துக்குச் சிகரம் வைத்தாற்போல் அமையும் தேர்த்திருவிழா இன்று காலை ஆறு மணிக்கு ஆரம்பமாகும். தேர் வெளிவீதியில் பவனி வருவதற்குச் சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் -

எனினும் பாதுகாப்பு சூழ்

(4ஆம் பக்கம் பார்க்க)



## தொழில் இழந்தோருக்கும் நிவாரணம் வழங்கப்படும்

யாழ். மாவட்டத்தில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகளினால் தொழில் இழந்துள்ளவர்களுக்கு நிவாரணமாக உணவுப் பொருள் வழங்க செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இடம்பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணம் போன்றே இவர்களுக்கும் வழங்கப்படும்.

மீனவர்கள். அன்றாடத் தொழில் செய்து உழைப்பவர் ஆகியோர் இதில் அடங்குவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## நல்லூரில் நேற்றும் குண்டுவீச்சு இருவர் காயம்; வீடுகள் சேதம்

யாழ் மாநகரசபை அலுவலகத்துக்கு சமீபமாக நேற்றுக்காலை 7.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டுவீச்சினால் இருவர் காயமடைந்தனர். ஏழு வீடுகளும் ஒரு கடையும் சேதம் அடைந்தன.

நல்லூர் ஆலயத்துக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த செல்வகுமார் (வயது15 மருதடி), நந்தினி (வயது 17 கல்வியங்காடு) ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர்.

நல்லூர் குறுக்கு வீதியில் உள்ள இரு வீடுகள் பலத்த சேதமடைந்தன.

மற்றும் திருமதி செல்லத்துரை என்பவரின் வீட்டுக் காணியில் வெடிக்காத குண்டு ஒன்று காணப்பட்டது. (இ-3-143)

## அந்த பொம்மர் விமானம் போனது, போனது தான்...!

யாழ்ப்பாணம், ஆக. 19

நேற்றுக்காலை 7-30 மணியளவில் தன்னந்தனியாக வந்த பொம்மர் விமானம் ஒன்று நல்லூர்ப் பகுதியில் குண்டுவீச்சு நடத்தியது.

பலாலியில் இருந்து வந்த அந்த பொம்மர் முதல் குண்டுத்தாக்குதலையாழ். மாநகர சபை அலுவலகத்துக்குச் சமீபமாக மேற்கொண்டது.

அடுத்த ஓரிரு நிமிடங்களில் இரண்டாவது குண்டுவீச்சை நடத்துவதற்காக பொம்மர் குத்திப் பதிந்தவேளையில்விடுதலைப் புலிகள் போராளிகள் கீழேயிருந்து உக்கிரமான எதிர்த் தாக்குதலை நடத்தினர்.

இதனால் நிலைகுலைந்த பொம்மர் சடாரென மேலெழுந்து எவ்வித சுற்றல் சுழலலும்நடத்தாமல் நகரைவிட்டு 'ஓட்டம்' எடுத்தது. அது போனது போனதுதான். திரும்பி வரவில்லை. (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### காணவில்லை

வேலணை கிழக்கு 1 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சண் முகராசா சுகிர்தகுமார் என் பவர் உடுவில் சில்லறைக்கடை ஒன்றில் வேலை பார்த்தவர் சைக்கிளில் சென்ற சமயம் காணவில்லை கண்டவர்கள் தயவுசெய்து மேல்க்கண்ட முக வரியுடன் தொடர்பு கொள் ளவும். சன்மானம் வழங்கப் படும். [13903]

### "பூஜைக்காக வாழும் பூவை"

குடும்பத்தில் தோன்றும் அனைத்துப் புயலுக்கும் அசை யாது நிற்கும் பெண் ஒருத்தி யின் புனித வாழ்வை சித்த ரிக்கும் நாவல் 40/- ரூபா துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன் னாகம், திருக்கணிதம் சாவ கச்சேரி, ஸ்ரீ காந் புத்தக சாலை, பூபாலசிங்கம் புத்தக சாலை நல்லூர். (14063)

## மாணவ தாதி: சம்பளம் இல்லை

யாழ்ப்பாணம், ஆக. 19 யாழ்ப்பாணம் தாதிகள் பயிற்சிப் பாடசாலை மூடப் பட்ட தினத்தில் இருந்து பயிற்சி பெறும் மாணவதாதி, குடும்பநல சேவையாளர் ஆகி யோருக்குச் சம்பளம் வழங் கப்படவில்லை.

மாணவர் குழு யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் மேற்கண்ட வாறு புகார் செய்துள்ளது.

கடந்த ஜூன் மாதம் 18 ஆம் திகதி இந்தப்பாடசாலை மூடப்பட்டது தெரிந்ததே.

கொழும்பில் உயர் அதிகாரி களிடம் இது தொடர்பாகப் பேச்சு நடத்துவதாகப் பணிப் பாளர் அந்தக் குழுவிடம் தெரிவித்தார். (இ - 3)

கண்ணீருடன் நினைவு கூரும்

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
சிவலோகேஸ்வரி
சிவதாசன்

ஜனனம்:
16 - 09 - 1943
மரணம்:
22 - 08 - 1987
திதி:
19 — 08 — 1990

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் பிரார்த்திக்கின்றோம்.

என்றென்றும்
அன்புடன்
கணவர்,
மகள்,
உற்றார்,
உறவினர்.
கோப்பாய் வீதி,
உரும்பிராய். [14045]

# 1ஆம் ஆண்டில் மாணவரை அனுமதிப்பதில் புது நடைமுறை

கொழும்பு, ஆக. 19 பாடசாலைகளில் முதலாம் ஆண்டு மாணவரை அனுமதிப் பது சம்பந்தமான புதிய நடைமுறை ஒன்றை கல்வி அமைச்சு வெளியிட்டு இருக் கிறது.

புதிய மாணவர் அனுமதிக் கப்படும் போது 40 சதவீத மான இடம் அப்பகுதியில் உள்ள பிரதான குடியிருப் பாளர்களின் குழந்தைகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

25சதவீதமான இடங்கள் அப்பாடசாலையில் படிக்கும் மாணவரின் சகோதரர்களுக் கும்—

25 சதவீதமான இடங்கள் பழைய மாணவரின் குழந் தைகளுக்கும்—

9 சதவீதமான இடங்கள் அப்பகுதிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற அரசு அதி காரிகள், ஆசிரியர்களின் குழந்தைகளுக்கும்—

எஞ்சிய ஒரு சதவீதமான இடம் அப்பகுதியில் வாழும் பிரதான குடியிருப்பாளர் அல்லாதவரின் குழந்தைகளுக் கும் வழங்கப்பட வேண்டும் என்பதே இப்புதிய நடை முறை என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-எ)

## ஊர்வலம் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஆக. 19 தமிழ் மக்களின் பாதுகாப்பை வலியுறுத்தி கொழும்புத் துறையில் இருந்து மௌன ஊர்வலம் நல்லூர் திலீபன் நினைவாலயம் வரை நடை பெற்றது.

தமிழ் மாநில அகதிகள் பாதுகாப்பு மன்றத்தின் ஆதர வில் இடம்பெற்ற இந்த ஊர் வலத்தைத் தொடர்ந்து பிரார்த் தனையும் நடைபெற்றது. (இ-30)


## ASSEMBLY OF GOD

— ஞாயிறு ஆராதனை —

Assembly of God யாழ்ப்பாண சபை மக்களுக் கான ஆராதனை ஞாயிறு காலை 8.30 மணிக்கு

J. K. E. SOLOMON,
No. 9, Fletches Lane,
Chundukuli.

என்ற முகவரியில் நடைபெறுகிறது என்பதை அறியத்தருகிறோம். [14062]



வடமாகாண
தெங்கு பனம்பொருள்
கூட்டுறவு சங்கங்களின் சமாசம்
மாவட்ட விவசாய பயிற்சி நிலையம்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

## பதவி வெற்றிடங்கள்

**கணக்காளர்:-**

கல்வித்தகைமை: க.பொ.த. உயர்தரத்தில் மூன்று பாடம் சித்தி. அல்லது கூட்டுறவுப் பணியாளர் பயிற்சிநெறி உயர்தரத்தில் சித்தியடைந்திருத்தல்

சம்பளம்: 885 — 30 7 — 40 8 — 1385
(1988 ஆம் ஆண்டின் புதிய சம்பளத்திட்டத்தின் 12 ஆவது குறியீட்டு சம்பள அடிப்படையில்.)

**காசாளர்:-**

கல்வித்தகைமை: க.பொ.த (சாதாரணம்), பரீட் சையில் கணக்கியல் தமிழ் உள்ளடங்கிய நான்கு திறமைச்சித்தியுடன், ஆறுபாடங்களில் சித்திய டைந்திருப்பதுடன் இருவருட கூட்டுறவு அனுப வமும் அல்லது கணக்கியல் உள்ளடங்கிய க.பொ.த. உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தியுடன் ஒரு வருட அனுபவம்.

சம்பளம்: 760 — 25 10 — 35 5 — 1185
(1988 ஆம் ஆண்டின் புதிய சம்பளத்திட்டத்தின் 14 ஆவது குறியீட்டு சம்பள அடிப்படையில்.)

**எழுதுனர்:-**

கல்வித்தகைமை: க.பொ.த. (சாதாரணம்) பரீட் சையில் கணக்கியல் தமிழ் உட்பட நான்கு பாடங்களில் திறமைசித்தியுடன் ஆறுபாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன், இருவருட அனுபவம்.

சம்பளம்: 700 — 15 10 — 20 5 — 950.
(1988 ஆம் ஆண்டின் புதிய சம்பளத் திட்டத்தின் 16 ஆவது குறியீட்டு சம்பள அடிப்படையில்.)

மேற் குறிப்பிட்ட பதவிகளுக்கான வயதெல்லை 25 — 40 வருடங்களாகும். இப் பதவிகளுக்கு விண் ணப்பிப்பவர்கள் 30 - 08 - 90க்கு முன்னதாக பொது முகாமையாளர் வடமாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவு சங்கங்களின் சமாசம், மாவட்ட விவசாய பயிற்சிப் பாடசாலை, திருநெல்வேலி, என்ற விலா சத்திற்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

அனுபவத்திலும், தகுதியிலும் கூடியவர்களுக்கு குறிப்பிட்ட சம்பளத் திட்டத்தில் பொருத்தமான இடத்தில் அமர்த்தப்படுவர் என்பது குறிப்பிடத் தக்கது.

பொது முகாமையாளர்,
வடமாகாண தெ. ப. பொ. கூ. ச. சமாசம்,
மாவட்ட விவசாய பயிற்சி நிலையம்,
திருநெல்வேலி.

[இ-5167]


# மன்னாரில் மானாவாரி நெற்செய்கை பாதிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 19 மன்னார் மாவட்டத்தில் மானாவாரி நெற்செய்கைக்கு நிலத்தை பண்படுத்தும் வேலைகளை தற்சமயம் ஆரம்பிக்க முடியாதுள்ள தாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்,

மானாவாரி நெற்செய் கைக்கு தற்போது நிலத்தை பண்படுத்த வேண்டும். அடுத்த மாதம் பயிரிட வேண் டும்.

அங்கு நிலைமை மோசமாக உள்ளதால் வயல்கள் எல் லாம் வெறுமையாகக் கிடக் கின்றன என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர். [இ-3]

## முற்பணம் பெறத்தவறியோர் கிளிநொச்சி அலையும் நிலை

யாழ்ப்பாணம், ஆக. 19 கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு இடம் பெயர்ந்த ஆசிரியர்க ளில் ஒரு பகுதியினர் சம்பள முற்பணம் பெற கிளிநொச் சிக்கு போக வேண்டியுள்ள தாம்.

கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு இடம் பெயர்ந்த ஆசிரியர்களுக்கு யாழ்ப்பாணத்தில் வைத்து சம்பள முற்பணம் வழங்க யாழ்- கல்வி அலுவலகம் கிளி நொச்சி கல்விப் பணிப்பாள ருக்கு பணம் வழங்கியிருந் தது.

கடந்த ஏழாம் திகதி வரை நல்லூர் சாதனா பாடசாலை யில் வைத்து முற்பணம் வழங்கப்பட்டது.

அச் சமயம் முற்பணம் பெறாத ஆசிரியர்களே கிளி நொச்சி சென்று முற்பணம் பெறவேண்டிய நிலை ஏற்பட் டுள்ளது. (இ-3-5)

## தபால்கந்தோர் இடமாற்றம்

கொழும்புத்துறை, ஆக. 19 தெல்லிப்பழை தபால் கந் தோர் பாதுகாப்புக் கருதி துர்க்காபுரத்தில் தற்காலிக மாக இயங்கிவருகிறது. (இ-30)

## படிகள் பலவிதம்

அச்சுவேலி, ஆக. 19 சுன்னாகம் பொதுச்சந்தை யில் நிறுத்தல் அளவையில் புதுவிதமான படிகள் பயன் படுத்தப்படுகின்றன.

100 கிராம் படியாக சிறிய அப்பளப் பைக்கெட், 50 கிறாம் படியாக லிப்டன் லாவோஜி தேயிலைப் பைக் கெட் அல்லது மூன்று கொட் டைப்பாக்கு 200 கிறாம் படி யாக மினகாய்த் தூள் சரை பயன்படுத்தப்படுகின்றன. [இ-11]

## கையொப்பம் இடத் தேவையில்லை

யாழ்ப்பாணம், ஆக. 19 பாடசாலைகள் இரண் டாம் தவணை விடுமுறைக் காக மூடப்பட்டுள்ளதால் வெளிமாவட்டங்களிலிருந்து இடம் பெயர்ந்து வந்த ஆசி ரியர்கள் யாழ். கல்வி அலு வலகத்தில் கையொப்பம் இடத் தேவையில்லை.

யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்த ரலிங்கம் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார். (அ-3)

## வீடமைப்பு அதிகார சபை

குருநகர், ஆக. 19 வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ். கிளை இம்மாதம் 1ஆம்திகதி தொடக்கம் கச்சேரியடி காட் டுக் கந்தோர் ஒழுங்கையில் உள்ள சொந்தக் கட்டடத்தில் இயங்கத் தொடங்கி உள்ளது. [இ-51]


## அறிவித்தல்

ஈஸ்வர் கோப்பிரேசன்
18, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

எங்களிடம் திருத்த வேலைக்காக தந்த
றேடியோக்கள், ரி. வி.
மற்றும் பொருட்களை

திருப்பி பெற்றுக் கொள்ளுமாறு வாடிக்கையாளரைக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.
19 [45], அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

211, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம், [13650]


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திரு. ஆறுமுகம் கேதாரநாதன்
(Superintendent of Customs
Preventive Officer, Marine Division, Colombo)

தோற்றம்: 09 - 09 - 1940
மறைவு: 09 - 09 - 1988

திதி: 19 - 08 - 1990

நீங்கள் மறைந்து ஆண்டு இரண்டு சென்றாலும் உங்கள் இனிய நினைவுகள் எம் இதயங்களில் என்றும் அழியாமல் நிலைத்து நிற்கின்றன.

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்:
அன்பு மனைவி, மக்கள்.

வேலணை கிழக்கு,
வேலணை - 5 (14064)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லை முருகன் தேரேறும் நிகழ்ச்சி

# இன்றைய அற்புதத் திருக்காட்சி

சரித்திரப் பிரசித்தியும், தொன்மையும் வாய்ந்த நல்லை நகரில் கோயில் கொண்ட கலியுகவரதன் தமிழ் மக்களின் தனிப்பெருந் தெய்வம்.

அழகிய கலைக் கோயிலாகக் காட்சியளிக்கும் நல்லூர் ஆலயம் அமைந்த இடம் புனிதமான பிரதேசமாகும். இங்கு ஞானிகள் பல நடமாடி இறையருள் பெற்றுள்ளனர். சித்தர்களும், பக்தர்களும் நல்லூரான் கருணையை நாடி அங்கு கூடுவார்கள். கடையிற் சுவாமிகள் அங்கு

## நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

நடமாடி அருள் பெற்று மகிழ்ந்த நிலையில் ஒரு சித்தர் பரம்பரையை உருவாக்கியுள்ளார்.

ஓர் ஆலயத்தில் நடைபெறும் திருவிழாக்களில் தேர்த்திருவிழா மிகச் சிறப்பானது. தேரும், தேரோடும் வீதியும், தேரடியும் புனிதமானவை. நல்லூர்த் தேரடியில் தவம், செபம், தியானம் என்பவற்றில் ஈடுபட்டவர்கள் செல்லப்பா சுவாமிகளும், சிவயோக சுவாமிகளும் ஆவர். செல்லப்பா சுவாமிகளை நல்லூர்த் தேரடியில் யோகர் சுவாமிகள் கண்டு தரிசித்தார். ''நல்லூர்த்தேரடியில் எங்குருவைக் கண்டேன்'' என்றும், ''தேரடியிற் தேசிகனைக் கண்டு தரிசித்தேன்'' என்றும் சிவயோக சுவாமிகள் தனக்குக் கிடைத்த குருவருள் பற்றிக் கூறியுள்ளார்.

கரங்கூப்பிச் சிரந்தாழ்த்திக் கந்தனை வலம் வந்தால் பிறவிப்பிணி தீயிற்பட்ட பஞ்சு போல் அற்றுப் போய்விடும் என்பது ஆன்றோர் கூற்று. ''எந்நாளும் நல்லூரை வலம் வந்து வணங்கினால் இடர்கள் எல்லாம் போமே'' என்பது யோகர் வாக்கு. அவரே ''நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு; அதனாலே நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்'' என்றும் அவரது நற்சிந்தனையில் கூறியுள்ளார்.

கடந்த ஐந்நூறு வருடங்களாகக் கோடானுகோடி மக்களின் இதயங்களிலே வற்றாத, முற்றாத அணி நலங்கொண்டு திகழ்கின்றான் நல்லூர்ப் பெருமான்.

தேரேறுவதற்கு வசந்த மண்டபத்திலிருந்து பெருமான் புறப்படுகிறார். ஆர்ப்

**- க. யோகநாதன் -**

பரித்து எழுந்து திரைகள் மோதும் சமுத்திரத்திலே செல்லும் பாய்க்கப்பல்போல் நல்லூர் ஆறுமுகன் பக்கங்களிலும் பின்னும், முன்னுமாக நிரம்பிய மனித சமுத்திரத்திலேயே நீந்தி வந்து தேரில் ஆரோகணித்துக்கொள்கிறார்.

பக்தர்களின் ஆரவாரம் பூரித்து எழுகிறது. முன்னாலே வைத்தகண் வாங்காது அதனை அள்ளிப் பருகும் பக்தர்கள் பின்னால் அங்கப் பிரதட்சணமும் அடியழித்தலுஞ் செய்யும் அடியார்கள். ஆங்காங்கே முருகன் புகழ் பாடும் அன்பர்கள்.

அவனும் தன் பன்னிரு திருவிழிகளாலும் எல்லோருக்கும் அருள்பொழிகிறான்.

அருட்சக்தி ஆறுமுகசுவாமி வள்ளி தெய்வானையுடன் அலங்காரமாய் தேரில் பவனி வரும் காட்சி உள்ளத்தைத் தொடும் ஆனந்த மயமானது. சொல்லொணாத துன்பங்களை அனுபவித்து வரும் தமிழீழ மக்களுக்கு அனைத்து இடர்களும் நீங்கி ஆனந்த வாழ்வு கிடைக்க வேண்டுமென இந்தை நாளில் பிரார்த்திப்போமாக.

தமிழீழ மக்கள் சுதந்திரமாக வாழக் கூடிய நிரந்தரத்தீர்வு விரைவாக கிடைத்திட அருள் புரிந்திட வேண்டும். நல்லையிலே வந்துதித்தவனே பாவிகள் படும் துன்பத்தைப் போக்கிட இன்றே அருள் செய்திடுக. வேல் கொண்டு வந்தவனே. அசுரர் செய்யும் அநியாயங்களை அடக்கிட இன்றே புறப்படுக.

தொல்லை வினைபோக்கும் நல்லைக்கந்தன் தேரேறி வந்து தரும் அருட்காட்சி இன்றைய அற்புதக் காட்சி.

★

## அசுரர்களை அழித்து அருளத் தேரில் வருகிறான்

தேரசைந்து வருகிறது திருமுறையோடே — நல்ல
ஊரசைந்து வடம்பிடிக்க உருண்டு வருகுது
தாரசைந்து தமிழ்முருகன் அருளைக் காட்டுது
— வருவீர்
நாமசைந்து நல்லைக்குமரன் தாளை வணங்குவோம்.

பாதங்களாற் பக்தருளத்திற் பரதம் பயின்றே — பத்ம
நாதஸ்வர ஓசைத்தேரில் நடனம் ஆடுகிறான்
வேதப் பொருளை ஈசனுக்கு விளக்கிச் சொன்னவன்
— அந்த
வேத கீத வெள்ளத் தேனில் மிதந்து வருகிறான்.

அடிமையல்லர் தமிழர் என்று அவனிக்கோதவே
— கொடிய
அசுரர்களை அழித்து, அருளத் தேரில் வருகிறான்
விடிவெமக்கு விரைவில் என்று விளக்கிக் காட்டிடும்
— தங்க
வேலைக் கையில் ஏந்தி வெற்றி வேலன் வருகிறான்.

அரிமருகன் சரவணபவன் ஆறுமுகவனாம் — குகனின்
முருக நாமத் திருப்புகழின் முழக்கம் கேட்குது
அருகில், அப்பால் உருகி நிற்கும் அடியவர்களை
— முருகன்
அருட்கரத்தால் அணைக்கத் தேரில் ஆடி வருகிறான்.

— சிற்பி —

★ ★ ★

## தமிழினம் காக்க தேரேறி வா!

தேரேறிவா வேலா தேரேறிவா ·
தெய்வானை வள்ளியுடன் தேரேறிவா
போரிங்கே காணுவாய் தேரேறிவா - பொல்லாப்
பொம்பர் ஹெலி வெல்ல வேலோடுவா
சூரனை வென்றவா தேரேறிவா – மரண
சூட்சமனை வெல்லவே விரைந்தோடிவா
தர்மம் தழைக்கவே தேரேறிவா – எம்
தமிழினம் காக்கவே ஓடோடிவா.

— நகுலராஜா செந்தூரன் -

## தமிழர் கொலை குறித்து ஈ. பி. ஆர். எல். எப்.

கொழும்பு, ஆக. 19

இலங்கை இராணுவத்தினர் பல்வேறு இடங்களில் தமிழர்களைக் கொன்று வருவதாக ஈ. பி. ஆர். எல். எப். இயக்கம் குற்றம் சாட்டி உள்ளது.

இம் மாதம் 5 ஆம் திகதியும் 9 ஆம் திகதியும் வவுனியா மாவட்டத்தில் கைதுசெய்யப்பட்ட மூன்று மாணவர்கள் உட்பட 27 தமிழர்களை இலங்கை இராணுவம் கொன்றுவிட்டதாக ஈ. பி. ஆர். எல். எவ்வின் எம். பி திரு. குகனேஸ்வரன், பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவுக்கு முறைப்பாடு ஒன்றை அனுப்பிவைத்திருக்கிறார்.

9ஆம் திகதி கைதான பதினெட்டுத் தமிழரில் 16 பேரின் சடலங்கள் மாமடுவுக்கும் கள்ளிக்குளத்துக்கும் இடையே போடப்பட்டிருந்ததாகவும் –

மற்றும் மூன்று மாணவர்கள் நவகமுவ என்னும் இடத்தில் ஊர்காவல் படையினரால் கொலை செய்யப்பட்டதாகவும்–

மேலும் ஒன்பது பேருடைய கதி என்ன என்பது தெரியவில்லை என்றும் திரு. குகனேஸ்வரன் கூறியிருக்கிறார்.

(இ-எ)

## சிங்களவருக்குச் சொந்தமான லொறிகள் தடுத்து வைப்பு

### பொருள் பரிமாற்றம் தடை

கொழும்பில் இருந்து உணவுப் பொருள்களுடன் வந்த 18 சிங்கள வியாபாரிகளின் லொறிகள் மதவாச்சியில் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த லொறிகள் மூலம் கொண்டுவரப்படும் பொருள்கள் பூந்தோட்ட வீதிக்கு அருகில் உள்ள குளத்துக்குள் வைத்து யாழ்ப்பாண வியாபாரிகளுக்கு விற்கப்பட்டு வந்தன.

பூந்தோட்ட வீதிக்கு அருகில் உள்ள குளத்தில் தற்சமயம் நீர் வற்றியதால் அந்தப் பகுதியிலேயே பொருள் பரிமாற்றம் நடைபெறுவது வழக்கம்.

இந்த லொறிகள் தடுக்கப்பட்டு பொருள்பரிமாற்றம் தடைப்பட்டுள்ளதால் பொருள் கொள்வனவுக்குச் சென்றவர்கள் வெறும் கையோடு திரும்பினார்கள்.

(5-3)

## வெளிநாட்டு அச்சுறுத்தலை முறியடிக்க இந்தியா தயார்

சென்னை, ஆக. 19

இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுச் சக்திகளை முறியடிக்க முப்படைகளும் உஷார் நிலையில் இருப்பதாக ஜனாதிபதி வெங்கடராமன் நேற்று அறிவித்தார்.

சென்னையில் நேற்று நடந்த இந்திய இராணுவ விருது வழங்கும் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையில் ஜனாதிபதி வெங்கடராமன் இதனைத் தெரிவித்தார்.

(இ-எ)

### கேந்திர இராணுவ நிலையங்களில்

## அமெரிக்க-பிரிட்டிஷ் பிரசைகளை தடுத்துவைக்க ஈராக் திட்டம்

பக்தாத், ஆக. 19

வெளிநாட்டுப் பயமுறுத்தல் நீங்கும் வரை அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் பிரசைகளை ஈராக், குவைத் நாடுகளில் உள்ள இராணுவ கேந்திர நிலையங்களில் தடுத்து வைக்கப்போவதாக பக்தாத் அரசு நேற்று அறிவித்தது.

ஈராக் ஆளும் கட்சிப் பிரமுகர் ஒருவர் வானொலி, டெலிவிஷன் மூலம் அரசின் திட்டத்தை வெளியிட்டார்.

இந்த திட்டத்தை அமெரிக்காவும் பிரிட்டனும் பலமாகக் கண்டித்துள்ளன.

சர்வதேச நடைமுறைகளுக்கு முற்றும் முரணான செயல் இது என்று அவை தெரிவித்துள்ளன.

இதே வேளை வளைகுடாவில் வைத்து ஈராக்கின் கரையோரக் கப்பல்கள் இரண்டை அமெரிக்க யுத்தக் கப்பல்கள் இடைமறித்து சோதனையிட்டன.

அக்கப்பல்களில் ஈராக்குக்கு பொருள்கள் எதுவும்கொண்டு செல்லப்படவில்லை என்பதை உறுதி செய்த பின்னர், அவை தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்பட்டது. [இ-எ]

### குண்டு வீச்சு

பச்சிலைப்பள்ளி, ஆக. 19

வியாழன் பகல் 1-45 மணி அளவில் சாவகச்சேரிப் பகுதியை வட்டமிட்ட நான்கு பொம்மர்கள் தனன்கிளப்பு வீதியிலுள்ள வீடு ஒன்றை நோக்கிக் குண்டுகளை வீசின.

(இ-117)

### பீரங்கி தாக்குதல்

பச்சிலைப்பள்ளி, ஆக.19

வெள்ளிக்கிழமை அதிகாலை தாளையடிப் பகுதியை நோக்கி கடலிலிருந்து பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது (இ-117)

### பிரேத ஊர்வலத்தில் ஹெலி சூடு

பச்சிலைப்பள்ளி, ஆக.19

பிரேத ஊர்வலத்தில் சென்றோர் மீது ஹெலியில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இச்சம்பவம் [illegible] இடம் பெற்றது. (இ-117)

## வர்த்தமானிகள் பிந்தின; தமிழர்கள் பெரும் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஆக 19

அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகைகள் பிந்திக் கிடைத்ததால் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த தகுதியுள்ள பலரும் பல பதவிகளுக்கும், பரீட்சைகளுக்கும் விண்ணப்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஜூன்மாதத்திலும் ஜூலை மாதத்திலும் வெளியிடப்பட்ட அரச வர்த்தமானிப் பத்திரிகைகள் ஒரே மொத்தமாக இப்போதே வந்துசேர்ந்துள்ளன. ஆனால் விண்ணப்ப முடிவுதிகதிகள் கடந்துவிட்டன.

பதவிஉயர்வுகள் புதிய நியமனங்களுக்கு அரச வர்த்தமானி விளம்பரங்களைப் பார்த்தே இப்பகுதியில்உள்ளவர்கள் விண்ணப்பிப்பது உண்டு.

ஆனால்ஜூன்மாதம் 7 ஆம் திகதி முதல் ஜூலை மாதம் 13 ஆம் திகதி வரையிலான வர்த்தமானிகள்கடந்தவாரம் தான் யாழ்ப்பாணம் வந்தன.

7-6-90 ல் வெளியானவர்த்தமானி அறிவித்தலில் சுதேச வைத்திய அமைச்சின் வைத்தியர் பதவிகளுக்கும், அரச திணைக்களங்களில் நாட்சம்பள அடிப்படையில் கடமையாற்றிய தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர் ஆகியோருக்கான தகுதிகாண் பரீட்சைக்கும், கணக்குப்பதிவாளர் சேவையில் II ஆம் வகுப்பு பதவி உயர்வுக்கான போட்டிப் பரீட்சைக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. இவற்றுக்கான விண்ணப்ப முடிவு திகதி 27-7-90 ஆகும்.

13-7-90 வெளியான வர்த்தமானி அறிவித்தலில் மாவட்ட ஆசிரியர் சேவைத் திட்டத்தின் கீழ் கஷ்டப் பாடசாலைகளுக்கு உதவி ஆங்கில ஆசிரியர்களைச் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. அதற்கான முடிவுதிகதி 27-7-90 என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த பதவிகளுக்கும், பரீட்சைகளுக்கும் தகுதியிருந்தும் ஏராளமானவர்கள் விண்ணப்பிக்கமுடியாது போயிற்று.

(அ-3.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணவுப் பொருட்கள் பெறாத
# ஜனசக்தி முத்திரைகளை சேமிப்பில் இட கோரிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 19

ஜனசக்தி முத்திரைகளுக்கு உணவுப் பொருள் பெறாதவர்கள் முத்திரைகளைத் தபாலகங்களில் சேமிப்பில் இடுமாறு -யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. அ. சபாபதிப்பிள்ளை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனசக்தி முத்திரைகளின் பெறுமதி ஆயிரம் ரூபா ஆகும். தற்போதைய உணவுப் பொருள் பற்றாக்குறைவால் 100ரூபா பெறுமதியான பொருள்களையே கொள்வனவு செய்யக் கூடியதாக இருக்கிறது.

மீதியான 900 ரூபா பெறுமதியான முத்திரைகளுக்கு இம்மாத இறுதிக்குள் பொருள் கொள்வனவு செய்ய முடியாது போனால் அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பாக அவற்றைத் தபாலகங்களில் சேமிப்பில் இடுமாறு அவர் கோரியுள்ளார். (இ - 3)

# வவுனியாவில் இளைஞன் பலி!

யாழ்ப்பாணம், ஆக. 19

வவுனியாவில் முகாமிட்டுள்ள தமிழ் அமைப்பு ஒன்று மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் மரணமானார்.

வெள்ளிக்கிழமை காலை 10. 30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

இந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் பூந்தோட்டச் சந்தியில் நின்ற சமயம், அந்த வழியால் சென்ற இளைஞர் ஒருவரை அழைத்ததாகவும், பயத்தில் அவர் ஓடியதாகவும், அவர் மீது வேட்டுத் தீர்க்கப்பட்டதாகவும் தெரியவந்தது. (இ - 3 - 5)

# பூநகரிக் கடற்கரையில் 30 பேரின் சடலங்கள்

யாழ்ப்பாணம், ஆக. 19

நேற்று முன்தினம்(வெள்ளி) பூநகரி மண்ணித்தலை கடற்கரையில் 30 பேரின் சடலங்கள் கரை ஒதுங்கின.

கரை ஒதுங்கிய சடலங்களை அப்பகுதி மக்களும், கடற்தொழிலாளர்களும் அடக்கம் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தியா சென்ற வள்ளம் ஒன்று கவிழ்ந்ததாலேயே இவர்கள் உயிரிழந்தனர் என்று நம்பப்படுகிறது. எனினும் ஊர்ஜிதமான தகவல் எதுவும் இல்லை.

வள்ளங்களில் அதிக எண்ணிக்கையானோரை ஏற்றிச் செல்வதால், இப்படியான துரதிர்ஷ்ட சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன. (ஒ-30)

## மலேஷியாவில் 175 இலங்கையர் கைது

கோலாலம்பூர், ஆக. 19

போலி விஸாக்களுடன் சென்ற 175 இலங்கையரை மலேஷியப் பொலீஸார் கைது செய்து காவலில் வைத்துள்ளனர்.

குடியகல்வு, குடிவரவு அதிகாரிகளின் முறையீட்டைத் தொடர்ந்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர். (இ-எ)

## குழந்தையின் சடலம்

அச்சுவேலி, ஆக. 19

ஆவரங்கால் சிவன்கோயிலுக்கு அருகில் உள்ள தோட்டக்கிணறு ஒன்றுக்குள் இருந்துஇரண்டு வயது மதிக்கத்தக்க பெண்குழந்தை ஒன்றின் சடலம் மீட்கப்பட்டது. குழந்தை அடையாளம் காணப்படவில்லை. (இ-11)

## முஸ்லிம் ஆயுதபாணிகள் சரண்!

கொழும்பு, ஆக. 19

மட்டக்களப்பில் மூன்று முஸ்லிம் ஆயுதபாணிகள் ஆயுதப் படையினரிடம் சரணடைந்தனர் என்று கொழும்பில் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர். (ஒ-எ)

## பங்களாதேஷில் கிருஷ்ண ஜெயந்தி விடுமுறைதினம்

டாக்கா, ஆக. 19

பங்களாதேஷில் கிருஷ்ண ஜெயந்தி பொது விடுமுறை தினமாக ஜனாதிபதி முகமட் எர்ஷாத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்து மதத்தலைவர்களின் மாநாடு ஒன்றில் பேசுகையில் ஜனாதிபதி எர்ஷாத் இந்த அறிவிப்பை விடுத்தார்.

பங்களாதேஷ் இஸ்லாமிய நாடு என்பது தெரிந்ததே, [இ-எ]

## ★ வாரம் ஒருநாள்

புதுடில்லி, ஆக. 19

அரசுக்குச் சொந்தமான வாகனங்களின் ஓட்டத்தை வாரத்துக்கு ஒருநாள் நிறுத்துவது குறித்து இந்திய அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்து வருகிறது.

பிரதமர் வி. பி. சிங் இதனை நேற்றுத் தெரிவித்தார்.

வளைகுடா நெருக்கடி காரணமாக உலக சந்தையில் எரிபொருள்களின் விலை பலமடங்கு அதிகரித்து வருவதைத்தொடர்ந்தே இந்த நடவடிக்கையை எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும் அவர் கூறினார். (இ-எ)

## வாதரவத்தை மக்கள் கஷ்டம்

கோப்பாய், ஆக. 18

வாதரவத்தை மக்கள் மின்சாரம் கிடைக்காததாலும் எரிபொருள் தட்டுப்பாட்டாலும் குடிதண்ணீருக்கு மிகவும் சஷ்டப்படுகின்றனர். இவர்களுக்கு குடிதண்ணீர் நிலாவரையில் இருந்தே வழங்கப்பட்டு வருகின்றது. [இ-72]

## நல்லூர்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலைக்கு ஏற்ப மாற்றங்கள் செய்யப்படலாம் என்றும் - ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (இ-3)

## யாழ். மாவட்ட...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

61 ஆயிரத்து 80 குடும்பங்கள் மட்டுமே பதியப்பட்டுள்ளன.

அதே நேரம் வெளிமாவட்டங்களில் இருந்து வரும் அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

# இலங்கை அரசு மீது ராஜீக நெருக்குதல்!

## பிரதமர் வி. பி. சிங். அறிவிப்பு

புதுடில்லி, ஆக. 19

இலங்கைத் தமிழர் பாதுகாப்புத் தொடர்பாக இலங்கை அரசுமீது இந்தியா தொடர்ந்து ராஜீக நெருக்குதலைக் கொடுத்துவருகிறது.

—இவ்வாறு கூறினார் இந்தியப் பிரதமர் திரு. வி பி சிங்

நேற்று புதுடில்லியில்நடந்த வெளிநாட்டுச் செய்தியாளர் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை விவகாரத்தில் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை இந்தியா தொடர்ந்தும் பற்றிநிற்க விரும்புகிறது.

இலங்கையில் வாழும் தமிழரின் ஜனநாயக அபிலாசைகளை பூர்த்தி செய்வதற்கு இலங்கை அரசு முன்வர வேண்டும். அப்போதுதான் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.

அதேவேளை —

விடுதலைப் புலிகளும் வன்செயலைக் கைவிட்டு ஜனநாயக நெறிமுறைகளுக்குள் செயற்பட முன்வரவேண்டும்.

பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணமுடியும். அதற்கு நீண்ட காலம் எடுக்கலாம். ஆனால் பேச்சுக்கள் மூலமே தீர்வு காண முடியும்.

இலங்கை விவகாரத்தில் 'தலையிடாத' கொள்கையையே கடைப்பிடிக்க விரும்புகிறோம். இதனால்தான் எமது படைகளை இலங்கையிலிருந்து விலக்கிக்கொண்டோம்.

அதனால் இலங்கைத் தமிழரின் பாதுகாப்பில் எமக்கு அக்கறையில்லை என்பது பொருளல்ல. நாம் அவர்களின் பாதுகாப்பில் அதிக அக்கறை எடுத்திருக்கிறோம்.

அதனால்தான் இந்த விடயத்தில் இலங்கை அரசுக்கு தொடர்ந்து ராஜீக ரீதியில் நெருக்குதல் கொடுத்து வருகிறோம்.

இலங்கையிலேயே தமிழ் அகதிகளுக்கு முகாம் அமைப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது. ஐ. நா. வின் அகதிகள் தூதரகம், செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் உதவியுடன் இந்த முகாம்கள் அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இத்தகைய முகாம்கள் இலங்கையிலேயே அமைக்கப்பட்டால், தமிழகத்தில் அகதிகள் வருகையால் ஏற்படும் நெருக்கடி தளரும் என நினைக்கிறேன்.

ஆனால் இலங்கையிலேயே அகதி முகாம்கள் அமைக்கும் யோசனைக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சம்மதிக்கவில்லை என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

— இவ்வாறு திரு. சிங் மேலும் கூறினார். (உ)

# எம்.பி. பதவியை ஏற்க சிவசிதம்பரம் மறுப்பு

கொழும்பு, ஆக. 19

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ஏற்பதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் மறுத்துவிட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை தான் ஏற்றுக்கொள்ளவில்லை என்று கூறும் கடிதம் ஒன்றை திரு. சிவசிதம்பரம் நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும் தெரியவருகிறது.

கடந்த பொதுத் தேர்தலில் யாழ். மாவட்ட தேர்தல் தொகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளராக அவர் போட்டியிட்டார் என்பதும்—

கூட்டணி வேட்பாளர் பட்டியலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற திரு. யோகசங்கரி அண்மையில் மரணமானதை அடுத்து கூட்டணி பட்டியலிலிருந்து ஒருவரை எம். பியாக நியமிக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கின்றது என்பதும் தெரிந்தவையே. (உ-ஒ-எ)

# தைத்த ஆடை ஏற்றுமதியால் அரசுக்கு கூடுதல் வருமானம்

கொழும்பு, ஆக. 19

இலங்கைக்குதேயிலையிலும் பார்க்க அதிக வருமானத்தை தைத்த ஆடை ஏற்றுமதிபெற்றுத் தருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு தைத்த ஆடை ஏற்றுமதியால் 1,700 கோடி ரூபா வருமானத்தை இலங்கைபெற்றது.

ஆனால் தேயிலை ஏற்றுமதியால் கிடைத்த வருமானம் 1,400 கோடி ரூபா ஆகும். (ஒ-எ)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவஞானம் பரமேஸ்வரி

திருமதி சிவஞானம் பரமேஸ்வரி 18 – 8 – 90 சனிக்கிழமை இறைபதம் எய்தினார். இவர் கஸ்தூரியார் வீதி, " சிவம் விறகு காலை " உரிமையாளர் கணபதிப்பிள்ளை சிவஞானம் அவர்களின் அருமை மனைவியும். விஜயசேகரன், வினோதன், பாலராணி, நிரஞ்சலா, சபீசன் ஆகியோரின் அன்புத் தாயாரும், பரந்தன் 3 ஆம் வாய்க்காலைச் சேர்ந்த பொடிசிங்கம் தம்பதிகளின் அருமை மகளும், அல்லைப்பிட்டி காலஞ்சென்ற பொன்னப்பா கணபதிப்பிள்ளை, திருமதி க. செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 18 - 8 – 90 சனிக்கிழமை மாலை கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெற்றது. தயவு செய்து உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
க. சிவஞானம்
(கணவர்)

இல. 150, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். [14065]

## வைத்திலிங்கம் ஏரம்பமூர்த்தி

யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் திரு. வைத்திலிங்கம் ஏரம்பமூர்த்தி திருச்சியில் 5-7-90 அன்று இறையடி சேர்ந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் – பத்மாவதி தம்பதிகளின் ஏகபுதல்வனும், காலஞ்சென்ற பகீரதியின் அன்புக் கணவரும் சிவகுமாரன்[லண்டன்], பத்மினி, சக்திகுமாரன் [குவைத்], சாந்திகுமாரன் [லண்டன்], பாமினி [இந்தியா], செந்தில்குமாரன் [ஜெர்மனி], செல்வகுமாரன், ஸ்கந்தகுமாரன் [இந்தியா], சதீஸ்குமாரன் [இந்தியா] ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜேஸ்வரி, காலஞ்சென்ற செல்வரட்ணம், கனகா, செல்வம். அமிர்தா, சத்தியகலா ஆகியோரின் அன்பு மாமனாரும், கௌரி, மூர்த்தி, சுபத்ரா. ஷர்மிளா, செல்லா, ராஜஷரேஷ்குமார், காயத்ரி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரது 45 ஆவது நினைவுநாள் இன்றாகும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் இத்தால் அறியத்தருகிறோம்,

தகவல்:
திருமதி ப. செல்வரட்ணம் [மகள்]
[14066]

# மரண அறிவித்தல்

## சண்முகம் பாலகிருஷ்ணன்

முன்னாள் Imperial groceries (பொரல்லை) உரிமையாளரும்; இந்நாள் ''லீலா ஸ்ரோஸ்'' நடத்துனரும், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான சண்முகம் பாலகிருஷ்ணன் அவர்கள் கொழும்பில் காலமானார். அன்னார் புவனேஸ்வரியின் அன்புக்கணவரும்; பாலச்சந்திரன், யோகச்சந்திரன் (இங்கிலாந்து], பாலகௌரி, ராஜகௌரி, புவனகௌரி ஆகியோரது அன்புத்தந்தையும்; ரவீந்திரராஜ் இன் அன்பு மாமனாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் கொழும்பு கனத்தை மயானத்தில் நேற்று [18-08-90] சனிக்கிழமை நடைபெற்றன இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி அறியத்தருகின்றேன்.

தகவல்;
செ. புண்ணியமூர்த்தி,
சட்டத்தரணி,
அளவெட்டி.

(சி-5170)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 19-08-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org